trinstitution@gmail.com

www.TamilRi.com

BIMSTEC FEDERATION

REPORT BY TRI

RATHISH KUMAR

UNITED STATES OF AMERICA

B I M S T E C

(BANGLADESH INDIA MYANMAR SRILANKA THAILAND ECONOMIC COOPERATION)
IS NOW
BAY OF BENGAL INITIATIVE FOR MULTI-SECTORAL TECHNICAL AND ECONOMIC COOPERATION

தமிழகத்தின் அரசியல் தன்மை என்பது சமீபத்தில் வெகுவாக மாறியிருப்பதை பார்க்க முடிகிறது. இதற்கு ஆரம்ப புள்ளியாக இருந்தது 2009 இல் நடந்த ஈழ இனப்படுகொலை. வெறும் அடையாள போராட்டங்களால் ஏமாற்றப்பட்டு தேவையற்ற சித்தாந்த பிடியில் இருந்து விலகி தமிழர்கள் தனது தேசிய அடையாளத்தில் நிற்கும் பொழுது போராட்டங்கள் மிக வீரியமாகவும், உண்மை தன்மையுடனும் நடக்கிறது. அதனை நாம் கூடங்குளம், முல்லை பெரியாறு, ஜல்லிக்கட்டு மீத்தேன் மற்றும் நெடுவாசல் போராட்டங்கள் மூலம் புரிந்து கொள்ளலாம்.

தமிழகம் மாற்றம் பெற்று வருகையில், இந்திய ஒன்றியமோ தனது அதிகாரம் அனைத்தையும் தவறாக பயன்படுத்தி மாநில உரிமைகள், மக்கள் வளங்கள் என அனைத்தையும் சூறையாடும் திட்டங்களை அதிகார பூர்வமாக செய்து வருகிறது. அதற்கான கட்டமைப்பை பல்வேறு கூட்டமைப்புகள் மூலம் செயல்படுத்தி வருகிறது.

BIMSTEC கூட்டமைப்பு மற்றும் இந்தியாவின் வெளியுறவு கொள்கை:

இந்திய ஒன்றியத்தை பொறுத்தவரை, இந்திய மக்கள் பற்றிய எந்த கவலை அவர்களுக்கு கிடையாது. அரசியலில் தற்பொழுது இருக்கும் கட்சிகளும் இனி வர இருக்கும் எந்த கட்சியானாலும் சரி அவர்கள் தனக்கு ஏற்றவாறு பியூரோக்ரசியை மாற்றி அமைத்து, கோர்பரேட் நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்து கொண்டு தனது பொருளாதார நிலையை வளர்த்தெடுக்க நாட்டு வளங்களை ஏற்றுமதி செய்து மக்கள் வாழ்வாதாரங்களை

நிர்மூலமாக்குகின்றனர். அதற்கு வளர்ச்சி, முன்னேற்றம், வேலை வாய்ப்பு போன்ற பல பொய்கள் சொல்லப்படுகிறது.

DEMOCRACY IS PIRACY என்பது தான் தற்பொழுது நடக்கிறது. மேலும் ஜனநாயக நாட்டில் மட்டும் தான் இது போன்ற திட்டங்கள் கொண்டு வர முடியும்.

இந்திய ஒன்றியத்தில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் திட்டங்கள் அனைத்தும் இந்திய அரசின் வெளியுறவு கொள்கை முடிவுகள் தொடர்புடையதாக இருக்கிறது. 1991 முதல் 1996 காலகட்டத்தில் நரசிம்ம ராவ் காலத்தில் இந்திய ஒன்றியத்தின் "**LOOK EAST**" கொள்கையை கொண்டுவந்தார்கள். அதன் பிறகு 1998 முதல் 2004 வரை வாஜ்பாய்னால் முன்னெடுக்கப்பட்டது. பொருளாதார தாராளமயமாக்கல் முதலில் கொண்டுவரப்பட்டது.

அதன்அ பிறகு மோடி பதவி ஏற்ற பின் **"LOOK EAST"** கொள்கை **" ACT EAST"** என்று கொள்கையாக மாறியது. இந்த கொள்கைகள் செயல்பட பல்வேறு நாடுகளின் ஒத்துழைப்பும் அவர்களுடன் பொருளாதார ஒப்பந்தமும் தேவை படுகிறது. அதற்கு செயல் வடிவம் கொடுப்பதற்காக இந்திய ஒன்றியத்தால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு தான் BIMSTEC FEDERATION (பிம்ஸ்டெக் கூட்டமைப்பு).

1997 ஆம் ஆண்டு இந்த கூட்டமைப்பு முதன் முதலில் "பங்களாதேஷ், இந்தியா, மியான்மார், ஸ்ரீலங்கா, மற்றும் தாய்லாந்து" ஆகிய நாடுகளுடன் போடப்பட்ட பொருளாதார பிராந்திய ஒத்துழைப்பு கூட்டமைப்பு தான் BIMST-EC. (BANGLADESH INDIA MYANMAR SRILANKA THAILAND - ECONOMIC COOPERATION) இன்று அதனுடன் பூட்டான் மற்றும் நேபால் நாடுகள் இணைந்தன் மூலம் அது BAY OF BENGAL INITIATIVE FOR MULTI- SECTORAL TECHNICAL AND ECONOMIC COOPERATION என்று பெயர் மற்றம் பெற்றது. அதனை தொடர்ந்து 1999 ஆண்டு பங்களாதேஷ், சீனா, இந்தியா மற்றும் மியான்மார் கிடையே உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு BCIM. அதனை குறித்து இன்னொரு கட்டுரையில் பார்ப்போம்

BIMSTEC கூட்டமைப்பிற்கான காரணமாக இந்திய ஒன்றியம் கூறுவது **"THESE NETWORK WOULD FACILITATE TRADE AND INVESTMENT, EXCHANGE OF ENERGY, PROMOTION OF TOURISM AND COMMUNICATION**

LINKS". அதாவது இந்த கூட்டமைப்பின் மூலம் வர்த்தகம் மற்றும் முதலீடு, ஆற்றல் பரிமாற்றம், சுற்றுலா மற்றும் தகவல் தொடர்பு இணைப்புகள் பரிமாறப்படும் என்று கூறுகிறார்கள்.

BIMSTEC கூட்டமைப்பு SAARC எனப்படும் தெற்கு ஆசிய நாட்டு குழுவிற்கும் ASEAN எனப்படும் தென் கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பிற்கு மாற்றாக இந்திய ஒன்றியம் கொண்டு வருகிறது. SAARC கூட்டமைப்பில் பாகிஸ்தான் மற்றும் சீனா இருப்பதால் பல திட்டங்களுக்கு தடை கற்களாக இருக்கிறார்கள் என்று இந்திய ஒன்றிய கூறுகிறது. அதனால் BIMSTEC கூட்டமைப்பை பல படுத்தி அதில் கவனம் செலுத்த இந்திய ஒன்றியம் முடிவு செய்திருக்கிறது. BIMSTEC கூட்டமைப்பு நாடுகளை பொறுத்தவரை உலக ஜனத்தொகையில் 22 % அதாவது கிட்டத்தட்ட 150 கோடி மக்கள் தொகை மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி திறன் GDP 2.7 டிரில்லியன் கொண்டதாக இருக்கிறது. இதன் மூலம் மிக பெரிய பொருளாதாரம் நடப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று இந்திய ஒன்றியம் கணிக்கிறது.

இந்த நாடுகளுக்கிடையே ஏற்படும் திட்டங்கள் எல்லாம் BIMSTEC -FREE TRADE AREA என்ற தாராளமய கட்டமைப்பின் மூலம் அமல் படுத்தப்படும். மேலும் இந்திய பெருங்கடல், வங்காள விரிகுடா கடல் பகுதியை இந்திய ஒன்றியம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும். இதன் மூலம் இந்திய ஒன்றியத்தின் 7500 KM நீண்ட கடற்கரை பகுதியை முழுமையாக தனது கட்டுப்பாடிற்குள் கொண்டு வரும் திட்டம் தான் இது

BIMSTEC கூட்டமைப்பின் திட்டங்கள் :

BIMSTEC கூட்டமைப்பில் பல துறைகளை பிரித்து திட்டங்கள் வகுக்கின்றனர். அதனை BIMSTEC SECTORS என கூறுகிறார்கள். முதலில் 6 துறைகளில் கவனம் செலுத்தினார்கள்.

- **TRADE & INVESTMENT**
- **TRANSPORT & COMMUNICATION**
- **ENERGY**
- **TOURISM**
- **TECHNOLOGY**
- **FISHERIES**

துறைகளுக்கான திட்டங்கள் இடப்பட்டு பிறகு 1991 ஆம் ஆண்டு மேலும் 8 துறைகள்

- **AGRICULTURE**
- **PUBLIC HEALTH**
- **POVERTY ALLEVIATION**
- **COUNTER-TERRORISM & TRANSNATIONAL CRIME**
- **ENVIRONMENT & NATURAL DISASTER MANAGEMENT**
- **PEOPLE-TO-PEOPLE CONTACT**
- **CULTURAL COOPERATION**

சேர்க்கப்பட்டன.

இதில் ENERGY, TRANSPORT, AGRICULTURE AND FISHERIES துறைகளில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏன்னென்றால் தமிழகம் நேரடியான பாதிப்புகளை சந்திக்க இருக்கிறது. அதற்கான காரணம் எரிசக்தி துறை மற்றும் போக்குவரத்து தான் முக்கிய உந்து சக்தியாக இருக்கிறது என்று BIMSTEC ஒப்பந்த ஆய்வு அறிக்கை கூறுகிறது.

BIMSTEC உறுப்பு நாடுகளிடையே மிக அதிக அளவிலான ஹைட்ரொ கார்பன் மாற்றம் ஹைட்ரொ பவர் படிமங்கள் அபரிவிதமான இருக்கிறது அதனை BIMSTEC இயற்கை எரிவாயு குழாய் மூலம் எடுத்து உறுப்பு நாடுகளிடையே வர்த்தகம் செய்யலாம் என்று இந்திய ஒன்றியம் திட்டமிட்டிருக்கிறது. இந்தியாவை பொறுத்தவரை இது வரை உள்நாட்டில் எடுத்த எரிவாயு மற்றும் கச்சா எண்ணெய் எல்லாம் உள்நாட்டு தேவைக்கு தான் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் தற்பொழுது எடுக்கப்போகும் எரிவாயு மற்றும் கச்சா எண்ணெய் BIMSTEC கூட்டமைப்பு நாடுகளுடன் ஏற்றுமதி வர்த்தகம்செய்வதற்கு பயன்படுத்தப்படும். கதிராமங்கலம், நன்னிலம், நெடுவாசல் மற்றும் இந்தியா முழுவதும் எடுக்கப்படும் கச்சா எண்ணெய் கொண்டு பெரும் வர்த்தகம் செய்ய இந்தியம் திட்டமிட்டிருக்கிறது. இந்த வளங்கள் எல்லாம் எடுத்து செல்ல இந்த நாடுகளுக்கிடையே சாலை மற்றும் கடல் போக்குவரத்து வசதி இருக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு அதற்கான சில திட்டங்களை

வரைந்திருக்கிறார்கள். அது தான் தரை வழி திட்டம் BIMSTEC CORRIDOR, கடல் வழி திட்டம் SAGARMALA சாகர்மாலா திட்டம்.

BIMSTEC ROAD CORRIDOR – ECEC – VCIC – ECR EXPANSION

சாலை வழி போக்குவரத்திற்கான திட்டத்தை BIMSTEC ROAD CORRIDOR என்று கூறுகிறார்கள். இதனை ECEC - EAST COAST ECONOMIC CORRIDOR, என்றும் கூறுகிறார்கள். இதில் அந்தந்த பகுதிக்கேற்ப சில பெயர்கள் பயன்படுத்தபடுகிறது. VCIC - VISHAKAPATNAM CHENNAI INDUSTRIAL CORRIDOR என்று சில பகுதிகளிலும் அதனை தொடர்ந்து ECR EXPANSION என்று சென்னையை தாண்டிய பகுதி குறிப்பிடப்படுகிறது. இந்த சாலை நீண்ட நெடிய சாலை ஆகும். வட கிழக்கு மாநிலங்களில் ஆரம்பித்தும் ராமேஸ்வரம் தனுசுகோடி வரை நீள்கிறது. பிறகு அங்கிருந்து ஈழத்தில் உள்ள தலைமன்னார் வரை ஒரு மிக பெரிய பாலம் காட்டப்படுகிறது. தரைவழி மற்றும் ரயில் போக்குவரத்துக்காக காட்டப்படுகிறது.

சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைத் மற்றும் கப்பல் துறை மத்திய அமைச்சர் போன் ராதாகிருஷ்ணன் கடந்த ஏப்ரல் 16 2016 ஆம் ஆண்டு பால்க் ஜலசந்தியின் மீது பாலம் கட்ட பாஜக உறுதியாக இருப்பதாக தெரிவிக்கிறார். தமிழகத்தின் ராமேஸ்வரத்தில் உள்ள தனஷ்கோடி யின் இருந்து ஈழத்தில் உள்ள தலைமன்னார் வரை சாலை போக்குவரத்துக்கு அந்த பாலம் கட்டப்படும். அதன் பிறகு பரமக்குடியில் இருந்து ராமேஸ்வரம் வரை நான்கு வழி இடுவார்கள் என்கிறார். மேலும் தற்பொழுது தனுசுகோடி, மக்கள் வாழ தகுதி இல்லாத இடமாக அறிவிக்கப்பட்டிருப்பது கூடுதளாக உறுதிப்படுத்துகிறது

இந்த பாலம் கட்ட 333 லட்சம் கோடி ரூபாயை பிலிபைன்ஸ் நாட்டை சார்ந்த ஏசியன் டெவெலப்மென்ட் வங்கி கடன் கொடுக்கிறது. இந்திய ஒன்றியம் மற்றும் ஏசியன் டெவெலப்மென்ட் வங்கி 25 லட்சம் கோடி கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கிறது. இது 800 KM தொலைவு கொண்ட விசாகப்பட்டினம் சென்னை வர்த்தக சாலை (VISAKHAPATNAM - CHENNAI INDUSTRIAL CORRIDOR) VCIC இடுவதற்காக ஒதுக்கப்பட்ட நதியாகும். மொத்தம் 2500 KM நீளம் கொண்ட EAST COAST ECONOMIC CORRIDOR (ECEC) திட்டத்தின் முதல் பகுதியாக விளங்குகிறது. இந்த வங்கி இதுவரை 10 லட்சம் கோடி ரூபாய் 2015 ஆம்

ஆண்டு கொடுத்திருக்கிறது. மேலும் 2025 ஆம் ஆண்டுக்குள் அதனை 43 லட்சம் கோடியாக உயர்த்த திட்டமிட்டிருக்கிறது.

BIMSTEC - SAGARMALA :

BIMSTEC கூட்டமைப்பிற்கு தேவையாக கடல் வழி போக்குவரத்துக்கான திட்டம் சாகர்மாலா மூலம் நிறைவேற்றப்படும். SAGARMALA என்கிற திட்டம் மிகவும் ஆபத்தான திட்டமாகும். இந்த திட்டம் ஒட்டு மொத்த தமிழர்களின் வாழ்வாதாரங்களை நிர்மூலமாக்கும் திட்டடமாகும். இந்தியாவின் கடற்கரையோரம் பல பெரிய மற்றும் சிறிய துறைமுகங்களை கட்டுவது தான் இந்த திட்டம். இதனை நீல புரட்சி என்கிறார்கள். இதற்கான தேசிய தொலைநோக்கு திட்டத்தை கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 14 ஆம் தேதி மோடி வெளியிட்டார். 4 லட்சம் கோடிக்கு மேல இறைக்கப்பட்டும் உருவாகும் இந்த திட்டம் மீனவர்களை முற்றுமாக அழிக்கும் திட்டம்.

அதனை நாம் எப்படி புரிந்து கொள்ளலாம் என்றால், மீனவர்களுக்கு இவர்கள் கூறும் திட்டமே விளக்கும் EFFICIENT EVACUATION ஒன்றே போதும். இந்த திட்டத்தை நடைமுறை படுத்த கடற்கரையோரம் வாழும் மீனவ மக்களை அப்புற படுத்த வேண்டும். பாரம்பரியமாக மீன் பிடித்து தொழில் செய்யும் மீனவர்களை அகற்றி பெரும் நிறுவனங்களுக்கு மீன் புடி உரிமையை தர எடுக்கும் முயற்சி தான் இது. அதாவது DEEP SEA FISHING செய்வதற்கு பாரம்பரிய மீனவர்கள் அகற்றப்பட வேண்டும். மீனவர்கள் இதனை எதிர்த்து கேள்வி கேட்காமல் இருக்க மீனவர்களுக்கு, மீனவர்களின் வாழ்வாதார மேன்படுத்துதல் மற்றும் அவர்களின் திறம் மேன்படுத்துதல் என்று கூறி மூன்று மாற்று திட்டங்களை கூறுகிறார்கள்.

1. துறைமுகம் மற்றும் கடல்சார் வேலைகளுக்கு பயிற்சி (மீன் பதப்படுத்தும் நிறுவன பயிற்சி)
2. கடல்சாராத வேறு திறம் பயிற்சி மற்றும் வாழ்வாதார பயிற்சி (விவசாயம் மற்றும் கைவினை பொருள் தயாரிக்கும்)
3. மீனவளர்ப்பு நிறுவனத்தில் பயிற்சியாளராக வேலைவாய்ப்பு மற்றும் மீன் இறக்கும் ஏற்றும் கூலி வேலை

இந்த கடற்கரையோர பகுதிகளை CEZ COASTAL ECONOMIC ZONE என்று வகைப்படுத்துகிறார். துறைமுகம் தலைமையிலான தொழில் மயமாக்கல் திட்டத்தின் ஒரு பகுதி இது. அதன் மூலம் மேலே கூறிய வேலைகளுக்கு மீனவர்கள் மாற வேண்டிய கட்டாயம் இருக்கிறது. இலங்கை கடற்படையினர் தினமும் தமிழக மீனவர்களை சுட்டு கொல்வது மீனவர்களை அந்த தொழில் விட்டு அப்புறப்படுத்தி கூலிகளாக பெரும் மீன் புடி நிறுவனங்களுக்கும் மாற்றும் வேலை தான் நடை பெறுகிறது. இது வரும் காலங்களில் தீவிரமாகி இந்திய ஒன்றிய கடற்படையை தமிழ்மீனவர்களை சுடும்.

BIMSTEC AND ASIAN DEVELOPMENT BANK :

BIMSTEC கூட்டமைப்பின் இந்த திட்டங்களுக்கு பெருமளவில் நிதியை **ASIAN DEVELOPMENT BANK** என்னும் வங்கி கடனாக கொடுக்கிறது. பிலிபைன்ஸ் நாட்டில் இருந்து இயங்கும் இந்த வங்கியை எதிர்த்து பல போராட்டம் உலகம் முழுவது நடை பெறுகிறது. பிலிபைன்ஸ் போன்று ஒரு சிறு நாட்டில் உள்ள வாங்கி எப்படி இந்திய பொருளாதாரத்திற்கு கடன் கொடுக்க முடிகிறது என்று ஆராய்ந்து பார்த்தல் அதற்கு பின்னாலும் அமெரிக்கா மற்றும் உலக வங்கி இருக்கிறது. அமெரிக்காவில் உள்ள பெரும் பணக்காரரான றொக்கபெல்லேர் பவுண்டேஷன் இதன் பின் இருப்பது தெரிகிறது. இந்த வங்கியில் இந்தியாவுக்கான காவெர்னெர் ராக அருண் ஜென்டலி இருக்கிறார். மேலும் SBI வங்கியின் CFO வாக இருந்த திவாகர் குப்தா 2015 ஆம் ஆண்டும் ADB வங்கியில் துணை தலைவராக பதியேற்கிறார். இந்த வங்கி தனது நாட்டின் வளர்ச்சிக்கு எதிராக இருப்பதாக பிலிபைன்ஸ் நாட்டு மக்கள் செய்த போராட்டங்களின் பல இருக்கின்றன. இந்த வங்கி பற்றி நாம் மேலும் தீவிரமாக ஆராய வேண்டும்

நாம் புரிந்து கொள்ள வேண்டியது:

இதனை நாம் எப்படி எதிர்த்து போராட போகிறோம் ? அதற்கான விழிப்புணர்வை எப்படி மக்களிடம் கொண்டு சேர்க்க போகிறோம் என்றால் அது மலை அளவு வேலை தான் ஆனாலும் செய்தாக வேண்டிய கட்டாயத்தில் வேறு வழியின்றி இருக்கிறோம்.

Sources / Links :

BIMSTEC - Cuts - http://www.cuts-citee.org/pdf/BIMSTEC_and_BCIM_Initiatives_and_their_Importance_for_India.pdf

BIMSTEC - http://www.bimstec.org/index.php?page=energy

Press Release Sagarmala - http://pib.nic.in/newsite/PrintRelease.aspx?relid=117691

Press Release NPP - http://pib.nic.in/newsite/PrintRelease.aspx?relid=138881

Sagarmala - http://pibphoto.nic.in/documents/rlink/2016/apr/p201641402.pdf

Ministry of Shipping - http://shipping.nic.in/index1.php?lang=1&level=0&linkid=99&lid=2332

ECEC - https://swarajyamag.com/insta/indias-east-coast-economic-corridor-project-gets-a-dollar375-million-fillip

Bridge to SL - http://indianexpress.com/article/opinion/columns/a-bridge-to-sri-lanka/

ADB Projects - https://www.adb.org/projects/india